# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,822 — 1931 ம் ஹூ தைமீ 3 ந் திகதி சனிக்கிழமை


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்

U 304/30.

1898 ம் ஆண்டின் சுவஸ்தான சுகாதார சங்கச் சட்டத்தின் 56 ம் பிரிவின்படி கேகாலை சுகாதார சங்கத்தாராற் செய்யப்பட்டு அதிகாரமந்திர சபையாரின் ஆலோசனையோடு தேசாதிபதியவர்களால் 57 ம் பிரிவின்படி அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள்.

உத்தமனுர் கட்டளைப்படி,

பீ. எச். புடில்வியன்,
கலொனியல் சக்கிறுத்தார்:

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1930 ம் ஆண்டு டிசெம்பர்மீ 22 ந் வ.

---

### மேற்சுட்டிய உபவிதிகள்.

C சாப்பாட்டுக்கடைகளும், தேத்தண்ணீர் கடைகளும், கோப்பிகடைகளும்.

1. சங்கத்தலைவர் திருப்திக்கு எல்லாச் சாப்பாட்டுக்கடைகளும், தேத்தண்ணீர், கோப்பிககடைகளும் துப்பரவாயும் சுகத்துக்கு ஏற்ற நிலையிலும் வைததிருக்கப்பட வேண்டும்.

2. எந்தச் சாப்பாட்டுக்கடையிலும் அல்லது தேததண்ணீர் கோப்பிககடையிலும் பாவிக்கப்படும் அல்லது அதற்குச்சேர்ந்த எல்லாப் பாத்திரங்களும், மேசை கதிரைகளும் மற்றும் தேவையான சாமானகளும், எப்பொழுதும் துப்பரவாய் வைத்திருக்கப்பட வேண்டும். தேத்தண்ணீர் கோப்பிககடைகளில் பாவிக்கும் மேசைகளைத் தகரத்தகட்டால் மூடிவிட வேண்டும்.

3. எல்லாச சாப்மாட்டுக் கடைகளிலும், தேத்தண்ணீர் கோப்பிக்கடைகளிலும் சுவர்கள் சுண்ணம்பு பூசப்பட்டு வெள்ளையடிக்கப்பட வேண்டும். அங்கேயுள்ள அறைகளுக்குள் நல்லாய்க் காற்றுவரக்கூடியதாயும் நல்ல வெளிச்சம் வரக்கூடியதாயும் இருகக வேண்டும். நிலத்தில் சீமந்து போட்டிருகக வேண்டும்.

4. எந்தச் சாப்பாட்டுக்கடையிலும் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடையிலும் அல்லது அதற்குச் சுற்றி இருக்கும் இடங்களிலும் இருக்கும் எல்லாக கஞ்சலும் அழுக்கும் ஒரு நாளைக்கு இரண்டுதரம் அங்கிருந்து கொண்டுபோகப்படவேண்டும்.

5. தொத்து வியாதி அல்லது பாம்பும் வியாதியுள்ளவனை அல்லது சாப்பாட்டுக் கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக் கடையின் பொறுப்பேற்றிருப்பவர் அறியக்கூடியதாய் கொஞ்சக் காலத்துக்கு முன் அப்படியான வியாதியுள்ளவனாய் இருந்தவனை அல்லது அப்படியான வியாதியுள்ளவனை கொஞ்சக் காலத்துக்குமுன் பராமரித்தவனை அப்படியாக சாப்பாட்டுக கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிககடையின் பொறுப்பேற்றிருப்பவர். அந்தச் சாப்பாட்டுக் கடையில் அல்லது தேததண்ணீர் கோப்பிக்கடையில் அல்லது அதற்குக்கிட்ட வேலைபார்க்கிறதற்கு விடப்படாது.

6. ஒரு சாப்பாட்டுக்கடையில் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடையிற் பாவிககப்படும் சீனியைக கண்ணாடி மூடிபோட்ட அகன்றவாயுள்ள போத்தில்களில் போட்டு வைக்க வேண்டும்.

7. விற்பனைக்காக வெளியாக வைத்திருக்கும் எல்லாப் பணிகாரங்களையும், இனிப்புப்பண்டங்களையும், அவை போன்ற மற்றும் பண்டங்களையும் ஈ இலையான் போகக் கூடாத நல்லாய் முடப்பட்ட கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருகக வேண்டும். ஈ இலையான் போககூடாத பாத்திரங்களிலன்றி மற்றப்படிக்கு ஒரு சாப்பாட்டுச் சாமானும் வெளியாக வைக்கப்படாது. பாவிககப்படும் எல்லாப் பாத்திரங்களும் துப்பரவாய் வைத்திருககப்பட வேண்டும்.

8. பாவிப்புக்குதவாத தேத்தண்ணீர், போப்பி அல்லது பால் அல்லது சாப்பாட்டு மிச்சம் அல்லது பாவிப்புக்குதவாத சமையற்சாமான் ஒன்றும் நிலத்தில் வீசப்படாது. சரியான பாத்திரத்தில் போட்டுவைத்து ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொண்டு போகப்பட வேண்டும்.

9. சாப்பார்ட்டுக்கடையில் அல்லது தேத்தண்ணீர் கோப்பிககடையில் கலந்த பால் விற்கவும் படாது; விலைககு எடுக்கும்படி கொடுக்கவும் படாது; விற்பனைக்கு வைக்கவும் படாது. இந்த உபவிதியில் "கலந்த பால்" என்பது பாலினுடைய அளவைக் கூட்டுகிறதற்கு அல்லது தோற்றத்தளவில் அதன் நிறம், குணத்தை ஏற்றிககாட்டுகிறதற்காக பாலுக்குத் தண்ணீரை அல்லது வேறு தண்ணீர்ப்

பதார்த்தத்தை அல்லது பொருளைச் சேர்ப்பதைக் கருதும்.

10. ஒவ்வொரு சாப்பாட்டுக்கடையிலும், தேத்தண்ணீர்க் கடையிலும், கோப்பிக்கடையிலும், யாவரும் காணக்கூடிய ஓர் இடத்தில் இந்தப் பிரமாணங்களை மட்டைபோட்டுத் தூக்கிவிட வேண்டும்.

11. ஒவ்வொரு சாப்பாட்டுக் கடையின் அல்லது தேத் தண்ணீர், கோப்பிக்கடையின் சொந்தக்காரன் அல்லது முதலாளி மேற்சொல்லிய உபவிதிகளில் எதுவும் மீறப்படுமாகில் அல்லது கைக்கொள்ளாது விடப்படுமாகில் அதற்கு உத்தரவாதமுடையரா யிருத்தல் வேண்டும்.

## D.—காலைகள்.

1. ஒவ்வொரு லைசென்சு முடிபட்ட காலையும் சங்கத்தலைவரால் பதிவுபண்ணப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு காலையின் வாசலிலும் லைசென்சு எடுத்த ஆளால் 'பதிவுபண்ணப்பட்ட காலை இலக்கம்.................." என்ற சொற்களும் சொந்தக்காரனுடைய பெயரும் பூச்சு மையால் எழுதப்பட்ட விளம்பரப் பலகை ஒன்று தூக்கியிருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு மாட்டுக் காலையும் சங்கத்தலைவர் திருப்திப் படக்கூடிய மாதிரியாய் நன்றாக மட்டம்பண்ணப்பட்டு, சரியான கான்களுடையதாயிருத்தல் வேண்டும். கடுமையானதும் மட்டமாயுமுள்ள மேற்பரப்பு இருக்கக்கூடிய மாதிரியாய் நிலம் கற்பதிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது உடைத்த கல்லுப் பரவப்பட்டு இறுகதப்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்டி மாட்டுக் காலையிலுள்ள எல்லாக் கட்டடங்களும் 3 ம் உபவிதியில் காட்டியபடி கட்டிவைத்து வரப்படவேண்டும். அம்மாட்டுக்காலையைத் துப்பரவாயும் சுகத்துக்கேற்ற மாதிரியாயும் வைத்திருக்க வேண்டும். அதை ஒவ்வொரு நாளும் நல்லாய்ச் சுத்தஞ்செய்து எல்லாச் சாணியையும் அழுக்கையும் குடியிருக்கும் வீடுகளுக்கு எட்ட உள்ள சங்கத்தலைவரின் அநுமதி பெற்ற இடத்தில் ஒவ்வொரு நாளும் கொண்டுபோய்க் கொட்டவேண்டும். மேற்சொல்லியபடி ஒவ்வொரு நாளும் துப்பரவு பண்ணுகிறதற்கு இடைஞ்சலாயிருக்ககூடிய மாதிரியாய் ஒரு சாமானாவது, பொருளாவது, எவ்விதமான பதார்த்தமாவது அப்படியான காலையில் வைக்கப்படாது.

3. மாட்டுக்காலையாகப் பாவிக்கப்படும் ஒவ்வொரு கட்டடத்தின் அல்லது கொட்டிலின் சொந்தக்காரனும் சங்கத் தலைவர் திருப்திப்படத்தக்கதாக கழுவின தண்ணீர், மூத்திரம், மழைத் தண்ணீர் ஓடக் கூடியதாய் வசதியான சீமெந்துக்கான் கட்டுவிக்க வேண்டும். ஆனால் தேவை என்று எண்ணினால் சங்கத்தலைவர் சொல்லியபடி கட்டப்பட்ட மூடப்பட்ட ஒரு பாத்திரத்தில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களில் மூத்திரம் அல்லது கழுவின தண்ணீர் விழக்கூடிய மாதிரியாய்க் கட்டப்பட்ட கான்கள் வைக்கும்படி சங்கத்தலைவர் கட்டளை பண்ணலாம் யாதும் அசங்கிய முண்டாகாதபடி சொந்தக்காரன் தன் செலவில் அந்தப் பாத்திரங்களில் இருக்கும் அழுக்கை ஒவ்வொரு நாளும் அங்கேயிருந்து அகற்றுவித்து விடவேண்டும். அக்கட்டடத்தின் அல்லது கொட்டிலின் நிலம் சிமெந்து நீற்றிய செங்கல் கல் அல்லது சிமந்துக் கொங்கிறீத்து, கரிச்சிலாசித்து, அல்லது கெதியில் துப்பரவாக்கக்கூடிய வேறு கடுஞ்சாமான் பதிக்கப்பட்டதாயிருக்க வேண்டும் அதைப் பள்ளம்திட்டியில்லாததாயும் பழுதில்லாததாயும் வைத்திருக்கவேண்டும். அக்கட்டடம் அல்லது கொட்டில் வெள்ளையடிக்கக்கூடிய மாதிரியாயக் கட்டியிருந்தால் சங்கத்தலைவர் கட்டளை பண்ணுவாராகில், ஆறு மாதத்துக்கு ஒரு தரம் அல்லது கூடின முறைகளில் அது வெள்ளையடிக்கப்படவேண்டும். ஆயினும் அக்கட்டடம் அல்லது கொட்டில் குடியிருக்கும் வீடுகளிலிருந்து தூரத்திலிருக்கிற நியாயத்தால் அல்லது வேறு நியாயத்தால் சங்கத்தலைவர் வேண்டியதில்லை என்று நினைத்தால் மேற்சொல்லிய ஒழுக்க விதிகளில் எதையும் அவர் வலியுறுத்தாது விடலாம்மேலும் தேவை யென்று நினைத்தால் மாட்டுக்காலையாகப் பாவிக்கப் படப்போகும் எந்தக் கட்டடத்தையும் கல்லால் அல்லது செங்கல்லால் அல்லது வேறு நிலை நிற்கக்கூடிய பொருட்களால் கட்டும்படியும் ஓட்டால் அல்லது இரும்புத் தகட்டால் கூரையை மூடும்படியும் சங்கதலைவர் கட்டளை பண்ணலாம்.

4. ஒவ்வொரு மாட்டுக்காலையையும், ஒவ்வொரு நாளும் நன்றாகத் துப்பரவு செய்து துப்பரவாயும் சுகத்துக்கு ஏதுவான மாதிரியும் வைத்திருக்கவேண்டும். சாணியும் கஞ்சலும் குடியிருக்கும் வீடுகளுக்குத் தூரத்திலுள்ளதும் சங்கத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஒரு இடத்தில் ஒவ்வொரு நாளும் அள்ளிக்கொண்டுபோய்க் கொட்டப்பட வேண்டும்.

5- சங்கத்து உத்தியோகஸ்தர்களால், அல்லது சுகதாரப் பகுதி டாக்குத்தரால் அல்லது சங்கத்தலைவரால் எழுத்து மூலமாக ஏற்படுத்தப்பட்ட வேறெவராலும் எந்த நேரமும் சோதிக்கப்படுகிறதற்கு ஒவ்வொரு காலையும் ஏதுவாயிருக்கும். இந்த உபவிதிகளின்படி கிடைத்த அதிகாரத்தைச் சங்கத்தலைவர் உண்டாக்கும் எல்லாக் கட்டளைகளும் எழுத்து மூலமாயிருத்தல் வேண்டும்.

6. மேற்சொல்லிய உபவிதிகளில் எதுவும் மீறப்படுமாகில் அல்லது கைக்கொள்ளாது விடப்படுமாகில் அதற்கு காலை வைத்திருக்க லைசென்ஸ் பெற்றவரே உத்தரவாதியாயிருத்தல் வேண்டும்.

## E.—புடவை கழுவும் துறைகள்.

இவ்வுபவிதிகளின் நோக்கத்தின் பொருட்டு புடவைகளைக் கூலிக்குக் கழுவும் தொழில் பார்க்கிறவன் எவனும் வசிக்குமிடம் "புடவை கழுவும் துறை" யெனக் கருதப்படும். புடவை கழுவுகிறவன் என்பது மேற்சொல்லப்பட்ட வேலை பார்க்கிறவனை, அல்லது அவ்வேலை செய்யும் அவனுடைய வேலைக்காரனை அல்லது துணைவனைக் கருதும்.

2 ஊத்தைப்புடவை வைப்பதற்காத் புறம்பான அறை வைத்துக்கொள்ளும்படி சுகாதார சங்கத்தலைவர் கற்பித்தால் புடவை கழுவும் ஒவ்வொருவனும் அவ்வண்ணம் வைத்துக்கொள்ளவேண்டும். அந்த அறை அங்கே காற்று உலாவத்தக்கதாயும் எப்பொழுது துப்பரவாயும் வைக்கப்பட்டு வருஷத்துக்கு இரண்டு முறை சுண்ணும்பினால் வெள்ளையடிப்பிக்கப்படவேண்டும்.

3. புடவை கழுவும் ஒருவன் ஆட்கள் வசிக்கும் எந்த அறையிலாவது ஊத்தைப் புடவை வைக்கப்படாது.

4. சங்கத்தலைவர் ஊர்ச்சுகாதாரத்தின் பொருட்டு கழுவுகிறதற்காகப் புறம்பான இடங்கள் வைப்பது தேவையென்று காணும்பொழுது அவ்விடங்களை நியமித்து விடுவார். அறிவித்தற் பலகைகளினால் அவ்விடங்கள் குறிக்கப்படும்.

5. புடவை கழுவுவோனுக்கு அல்லது அவன் குடும்பத்தில் அல்லது வீட்டிலுள்ள எவருக்கும் தொற்றுநோய் அல்லது பரம்பும் நோய் உண்டுபடுமாகில் சுகாதார டாக்குத்தருக்கு அல்லது சுகாதார இன்ஸ்பெக்டருக்கு 24 மணித்தியாலத்துக்குள் அவன் அதைக் குறித்து அறிவிக்க வேண்டும்.

6. புடவை கழுவுவோனுக்கு அல்லது அவன் குடும்பத்தில் அல்லது வீட்டிலுள்ள ஆளுக்கு தொற்றுநோய் அல்லது பரம்பும்நோய் உண்டுபடுமாகில், புடவை கழுவுந் துறையில் எல்லா வேலையும் நிறுத்தப்பட வேண்டும். சங்கத் தலைவரின் விசேஷ உத்தரவில்லாமல் புடவை கழுவுந் துறைக்கு அல்லது அங்கிருந்து வெளியே அவ்வியாதி துவங்கினதின் பிற்பாடும் நடக்கும்பொழுது புடவைகள் கொண்டுபோகப்படாது.

7. ஒரு வீட்டிலுள்ளவர் ஒருவர் யாதும் ஒரு தொற்று வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பதாக நம்புவதற்கு நியாயம் உண்டானால் சுகாதாரசங்கத் தலைவரின் அல்லது சுகதார டாக்குத்தரின் உத்தரவில்லாமல் புடவை கழுவும் எவனும் அவ்வீட்டிலிருந்து ஊத்தை உடுப்பு எடுக்கப்படாது.

8. புடவை கழுவும் ஒவ்வொருவனும் யார் யாருக்குப் புடவை கழுவிக் கொடுக்கிறது என்று தெரிவிக்கும் ஒரு இடாப்புக் கொண்டுவரும்படி சுகாதார சங்கத்தலைவர் அல்லது சுகாதார டாக்குத்தர் கேட்கும்போது அப்படியான இடாப்பை எழுதிக்கொடுக்க வேண்டும்.

## F.—பொது விடுதிகள்.

இந்த உபவிதிகளின் நோக்கத்தின் பொருட்டு, "பொது விடுதி வீடு" என்பது ஒரே குடும்பத்திற்குச் சேராத நாலு அல்லது அதற்கதிகமான ஆட்கள் கூலி கொடுத்து குடியிருந்து வரும் எவ்வீட்டையும் அல்லது வீட்டின் பாகத்தையும் கருதுவதாகும்.

2. ஒரு பொது விடுதி வீடு உறுதியாக் கட்டப்பட்டு பழுது பார்த்து நல்ல நிலையில் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். படுக்கை அறைகள் சங்கத்தலைவரின் திருப்திக்கு ஏற்றபடி காற்று உலாவக்கூடியவைகளாயும் வெளிச்சம் வரக்கூடியவைகளாகவும் இருக்க வேண்டும். அதன் சுவர்கள் வருஷத்தில் இரண்டு முறை வெள்ளையடிக்கப்பட வேண்டும்.

3. பொது விடுதி வீட்டை வைத்து இருப்போன் எல்லா வேளைகளிலும் அவ்விடத்தைத் துப்பரவாயும் சுகதார நிலையிலும் வைத்திருக்க வேண்டுவதுமன்றி எல்லா அழுக்கையும் துர்நாற்றம் கொடுக்கும் பொருட்களையும் அங்கேயிருந்து அகற்றுவித்துப்போடவும் வேண்டும்.

4. பொது வீட்டிலிருப்பவன் எவனும் பரம்பும் நோய் அல்லது தொற்றுநோயால் பீடிக்கப்பட்டால் அக்காரியத்தைக் குறித்து வீட்டுக்காரன் அல்லது மேற்சொல்லிய ஆள் சுகாதார சங்கச் சக்கிறுத்தார் அல்லது சுகாதார சங்க இன்ஸ்பெக்றர் மூலமாக அதைக் குறித்து உடனே தக்க அதிகாரத்தருக்கு அறிவிக்க வேண்டும். மேலும் அவர்

விடுதிவீட்டை விட்டு யாவரும் புறப்படுவதைப்பற்றியும் படுக்கைச்சாமான்களையும் உடுப்புகளையும் மற்றும் சாமான்களையும் சுத்திசெய்வதை அல்லது அழித்துவிடுவதைப்பற்றியும் வீட்டுக்குப் புகைகாட்டுவதையும், சுத்திகரிக்கும் மருந்து போடுவதையும் வீட்டைச் சுண்ணம்பினால் வெள்ளையடிப்பதையும் பற்றியும் தக்க அதிகாரத்தார் கொடுக்கும் கட்டளைகளைக் கைக்கொண்டொழுக வேண்டும்.

5. வீட்டிலிருப்போரின் பாவிப்புக்குப் போதிய மலங்கழிக்குமிடங்கள் வைத்துக்கொடுக்கவும் அதைச் சுகாதார நிலையில் வைத்துக்கொள்ளவும் பொது விடுதிவீட்டை வைத்திருப்போன் பொறுப்புடையவனாவன்.

6. எந்தப் பொது விடுதிவீட்டிலாவது இருக்கக்கூடிய ஆட்களின் ஆகக்கூடிய தொகையை சுகாதாரசங்கத் தலைவர் நியமித்து விடுவதற்கு இதனால் அதிகாரங் கொடுக்கப்படுகின்றார். லைசென்சில் இத்தொகை காட்டப்படவேண்டும். பொது விடுதிவீடு வைத்திருப்போன் எவனும் இத்தொகைக்குக்கூட ஆட்கள் இருக்க விடுவானாகில், அவன் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவனாவன். இந்த உபவிதியின் நோக்கத்தின் பொருட்டு 12 வயதுக்குட்பட்ட இரண்டு பிள்ளைகள் ஒரு ஆளாகக் கவனிக்கப்படுவார்கள்.

7. எந்தப் பொது விடுதிவீடும் அதற்குச்சேர்ந்த நிலமும் எல்லா வேளைகளிலும் சுகாதார சங்கத் தலைவரால் அல்லது சுகாதாரசங்க டாக்குத்தரால் அல்லது சுகாதார சங்கத்தின் சக்கிறுத்தாரால் அல்லது இன்ஸ்பெக்றரால் சோதிக்கப்படுவதற்கேதுவானவைகளாம்.

விக்கினமானவும் அருவருப்புண்டாக்கக்கூடியனவுமான தொழில்கள்.

இந்த உபவிதிகளின் நோக்கத்தின்பொருட்டு, "விக்கினமானவும் அருவருப்புண்டாக்கக்கூடியனவுமான தொழில்கள்" என்பது பின்வருவனவற்றில் எதையும் கருதும். செயற்கையான பசளை சேகரித்தல் அல்லது ஆக்குதல்; இரத்தமல்லது கழிவுமாமிசம் அவித்தல்; இரத்தம் அல்லது கழிவுமாமிசம் உலர்த்தல்; தோல் பதனிடுதல் கொழுப்புருக்குதல்; கொழுப்பு வடித்தல்; சவர்க்காரம் செய்தல்; தென்னை மட்டை ஊறவைத்தல்; தும்புக்குச் சாயம் தோய்த்தல்; இயந்திர உதவியால் தேங்காய்நெய் வடித்தல்; தும்புசேகரித்தல் அல்லது ஆக்குதல்; தோல் எலும்பு செயற்கையான பசளை அல்லது செயற்கையான பசளையாக்குவதற்கு வேண்டிய பொருட்கள் சேகரித்தல், 5 அந்தர் நிறைக்கு மேற்பட்ட மாசு (மாலைதீவு மச்சம்) சேகரித்து வைத்தல்; செங்கல்லும் ஓடும் செய்தல்; சுண்ணம்பு நீற்றுதல்; சோடா லெமனேற் செய்தல்; மின்னாம் சுத்தப்படுத்தல் அல்லது சேகரித்து வைத்தல்.

2. சுகாதாரசங்கத்தின் எல்லைக்குள்ளே உள்ள எந்த நிலத்தையும் அல்லது வளவையும் உடையோன் அல்லது ஆட்சி செய்வோன் அவ்வளவில் அல்லது நிலத்தில் விக்கினமான அல்லது அருவருப்பு உண்டாக்கும் எந்த வியாபாரத்தையும் அல்லது கைத்தொழிலையும் சுகாதாரசங்கத் தலைவரால் கொடுக்கப்பட்ட லைசென்ஸ் உத்தரவுப் பத்திரமின்றி நடத்தவேனும் நடத்தவிடவேனும் படாது. மேலும் அவ்வுத்தரவுப் பத்திரத்தைக் கொடுப்பதினால் சனங்களின் சுகத்துக்கு நஷ்டம் வரக்கூடும் அல்லது அதனால் ஒரு அசங்கியம் உண்டாகக்கூடுமென்று சங்கத்தார் அபிப்பிராயம் கொள்வார்களாகில் அவ்வுத்தரவுப் பத்திரத்தைக் கொடுக்கமறுப்பதற்கு சங்கத்தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்படுகின்றது. அதிகாரமந்திர சபையோடுகூடிய தேசாதிபதியவர்களின் அனுமதிப்படி காலத்துக்குக்காலம் சுகாதார சங்கம் விதிக்கும் சலார்கள் அவ்வித உத்தரவுப் பத்திரம் பெறுவதற்குக் கட்டப்பட வேண்டும்.

3. இவ்வுபவிதிகளில் யாதொன்றையாவது மீறினதற்காக இரண்டு அல்லது பலமுறைகளிலே குற்றவாளியென்று ஒருவன் கோட்டாரால் விதிக்கப்பட்டால், அந்த இரண்டாவது அல்லது அதன்பின் விதிக்கப்படும் தீர்ப்பை எழுதும் கோட்டார், இவ்வுபவிதிகளின்படி சுகாதார சங்கத் தலைவரால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்சை அழிப்பது நீதியுள்ளதாயிருக்கும். ஒரு கோட்டால் ஒரு லைசன்சை அவ்வண்ணம் அழிக்கப்பட்டதின்பின். அப்படியானவனுக்கு ஓர் புது லைசென்சை தம் நற்கருத்தின்படி கொடாது விடுவதற்கு சுகாதார சங்கத்தலைவருக்கு அதிகாரமுண்டு.

4. மேற்கூறிய வியாபாரங்கள், முயற்சிகள், கைத்தொழில்களை நடாத்துவதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் அவைகளிலிருந்து துர்க்கந்தம் முண்டாகாமல் தக்க விதமாய் சேர்த்து வைக்கப்பட வேண்டும். துர்க்கந்தம் எழும்பக்கூடியவும் அருவருப்புக் காரணமாயிருக்கக்கூடியவுமான சாமான்கள் அதிக போக்குவரவான வழியால் கொண்டுவர வேண்டியதாயிருந்தால் அவைகளெல்லாம் நீருறிஞ்சாத மூடப்பட்ட பாத்திரங்களில் கொண்டுபோகப்பட வேண்டும் அல்லது யாதோர் அசங்கிய முண்டாகாதவண்ணம் சங்கத்தலைவர் குறிக்கும் மாதிரியாகக் கொண்டுபோகப்பட வேண்டும்.

5. இவைகள் செய்யப்படும்பொழுது எழும்பும் அருவருப்புள்ள வாயு அல்லது ஆவி தீங்கு வருவியாவண்ணம் சித்தியாகக்கூடிய எத்தனங்கள் செய்யப்பட வேண்டும். அவ்வித வாயுக்களும் அல்லது ஆவியும் ஒன்றில் காற்றோடு சேர்ந்து கெடுதி அல்லது சேதம்விளைவியாவண்ணம்வேண்டிய உயரத்திலும் தக்க மாதிரியாகவும் வெளிக்காற்றோடு தள்ளிவிடப்பட வேண்டும். அல்லாவிடில் நேரே நெருப்புக்கூடாய் அல்லது ஓர் சுத்திகரண கருவிக்குள்ளே போக்கப்படவேண்டும். எல்லா வளரிகளிலேயும் வேண்டிய கான்கள் இருக்கவேண்டும். அக்கான்கள் சரியான ஒழுங்காக வைக்கப்பட்டு தினமும் கழுவப்பட வேண்டும்.

6. தளங்கள் உடைவு பழுதில்லாது காப்பாற்றப்பட வேண்டும். அவைகள் தினமும் துப்பரவும் செய்யப்பட வேண்டும். சங்கத்தலைவர் கட்டளைப்படியும் அவர் குறிக்கும் நீர்சுவறக்கூடாத வஸ்துவினாலும் அத்தளங்கள் கட்டப்பட வேண்டும்.

7. அழுக்கை உறிஞ்சாவண்ணம் சுவர்கள் எல்லாம் ஒழுங்காக வைத்திருக்கப்பட வேண்டும். அவைகள் வருஷத்துக்கு இரண்டு முறை அல்லது சுகாதார சங்கத்தலைவரால் அல்லது சுகாதார சங்க டாக்குத்தரால் அப்படிச் செய்யும்படி கட்டளையிடப்பட்டால் மேலதிகமான தடவைகளிலும் வெள்ளை அடிக்கப்பட வேண்டும்.

8. ஆயுதங்களும் பாத்திரங்களுமுட்பட எல்லாக் கருவிகளும் துப்பரவாக வைத்திருக்கப்பட வேண்டும், கூடுமானால் அவைகள் தினமும் சுத்திபண்ணப்பட வேண்டும். கழிவு குப்பை சீவுத்துண்டுகள், உதவாத பொருட்கள் கழிவு பொருட்கள்வளவிலேயே வேறு வியாபார முயற்சிக்கு உடனே உபயோகிக்கப்படுவதற்கென்று வைத்தால் ஒழிய தினமும் வளவிலேயிருந்து மூடப்பட்ட பாத்திரங்களில் கொண்டுபோகப்படும்.

9. தோல் அல்லது வேறு வஸ்துக்கள் கழுவுதற்கு அல்லது நனையவைப்பதற்கு உபயோகிக்கப்படும் வக்குகளிலிருந்து துர்க்கந்தம் எழும்பாவண்ணம் வேண்டிய பல முறைகளிலும் அவைகளிலுள்ள தண்ணீர் வெளியே ஊற்றப்பட்டு அவ்வக்குகள் துப்பரவுபண்ணப்பட வேண்டும்.

10. எந்த அருவருப்பான முயற்சியையும் அல்லது கைத்தொழிலையும் நடாத்துவோன், அல்லது அப்படியான அருவருப்பாயுள்ள முயச்சி அல்லது கைத்தொழில் செய்யப்படும் நிலத்தை அல்லது வளவை உடையோன் அல்லது ஆட்சி செய்வோன் யாதோர், அழுக்கான துர்நாற்றமுள்ள அருவருப்பான நீரை அல்லட வேறு சலத்தை அதனுட் செலுத்துவதால் அல்லது ஓடவிடுவதால் அல்லது அங்கே யாதோர் அருவருப்பான வஸ்துவைக் கழுவவிடுவதால அல்லது வேறென்னவிதமாகவாவது, ஓர் ஆற்றையாவது, நீரோட்டத்தையாவது. வெட்டாற்றையாவது, வாய்க்காலையாவது இணைறையாவது, குளத்தையாவது, தடாகத்தையாவது அசுசிப்படுத்தப்படாது

11. மேற்சொல்லிய தொழில்கள் நடத்தும் வள்வுகளை சுகாதார சங்கத்தலைவராலும் அல்லது அவரிடமிருந்து முறைப்படி தத்துவம்பெற்ற வேறெவராலும் நியாயமான எல்லா வேலைகளிலும் சோதிக்கப்படுவதற்கு இடங்கொடுக்கப்படல் வேண்டும்.

12. செங்கல்லு அல்லது ஓடு செய்வதற்கு, கட்டடவேலை செய்வதற்கு அல்லது வேறெந்த முகாந்தரத்திற்காகவாவது களிமண், மண், கல், கிறவல், கபக அல்லது வேறெந்த வஸ்துவும் கிண்டி எடுக்கப்படும் நிலத்தை உடையோன் அல்லது ஆட்சிசெய்வோன் அங்கே வேண்டிய கான்கள் உண்டோவென்றும் அக்குளிகளுள்ளும் அகழ்குளிகளுள்ளும் தண்ணீர் தங்கிநில்லாவண்ணம் மூடப்பட்டிருக்கின்றனவோ என்றும் பார்த்துக்கொள்வதற்கு பொறுப்புடையவனாவன்.

13. விக்கினமான அல்லது அருவருப்பான தொழில் எதுவும் நடத்தப்படும் எந்த வளவிலும் குடியிருப்போன் மேற்சொல்லிய உபவிதிகளில் எதுவும் மீறப்பட்டபோது அல்லது கைக்கொள்ளாது விடப்பட்டபோது அதற்கு உத்தரவாதமுடையவனாயிருத்தல் வேண்டும்.

K.—பாற்சாலைகள்.

இந்த உபவிதிகளின் நோக்கத்தின் பொருட்டு கமம், கமவீடு, மாட்டுமால், பாற்கிட்டங்கி, பாற் கடை, பால் செலவு செய்யும் ஸ்தலம், பால் சேகரிக்கப்பட்டு வைத்து இருக்குமிடம் விற்பனவுக்காய் பால் வைத்திருக்குமிடம் இவைகளெல்லாம் பாற்சாலையெனக் கருதப்படும். பசுவைத்திருப்போன், பால் விற்போன், பாற்சாலையை உடையோன், பலபேருக்கு உள்ளதாயுள்ள பாற்சாலையின் தலைமைக்காரன், அல்லது அப்படியான பாறசாலையை நடப்பிப்போன் ஆகிய இவர்கள் "பாற்காரன்" என்ற பெயரில் அமைவார்கள்.

2. ஒரு வளவில் திறந்த மலக்கிடங்கு அல்லது கிடங்கற்ற மலம கழிக்குமிடத்துக்கு 100 அடிக்குள் பாற்சாலைகள் ஸ்தாபிக்கப்படக் கூடாது அல்லது நச்சுக்காற்றுகள் கிட்டக்கூடிய இடங்களிலும் இருக்கப்படாது. ஒரு பாற்சாலை

யிலிருந்து 100 அடிக்குள் ஒரு திறந்த மலக்கிடங்கு அல்லது கிடங்கற்ற மலங்கழிக்குமிடம் கட்டப்படாது.

3. ஒவ்வொரு பாற்சாலைவளவிலும் சங்கத்தலைவரின் திருப்திக்குத்தக்க போதிய கான்கள் இருக்கவேண்டும். அக்கான்களை ஒழுங்காகக் கழுவப்பட்டிருக்கவேண்டும். பாற்சாலை வளவெதிலும் அழுக்கான நீர்த்தங்கி நிற்க விடப்படாது.

4. பாற்சாலை வளவிலும் புறத்தியிலுமுள்ள குப்பை கூளங்களெல்லாம் தாமசமின்றி எடுக்கப்படவேண்டும். சாணி தினமும் அகற்றப்பட வேண்டும்.

5. ஒவ்வொரு பாற்சாலையின் பாவிப்புக்காகவும் போதிய தூரத்தில் சுத்தமாகப் பத்திரப்படுத்தப்பட்ட தண்ணீர் வைத்திருக்கவேண்டும். இத்தண்ணீர்த் தலத்தில் அல்லது அருகில் குளிக்கவும் சீலைகழுவவும் கூடாது.

6. பால்கொடுக்கும் பசுக்களும் எருமைகளும் நோயில்லாதவைகளாயிருக்க வேண்டும். தொற்றுவியாதியுள்ளவனை அல்லது பாற்காரன் அறியக்கூடியதாய் கொஞ்சக் காலத்துக்குமுன் அவ்வியாதி உள்ளவனாய் இருந்தவனை அல்லது அவ்வியாதியுள்ளவனை கொஞ்சக் காலத்துக்கு முன் பராமரித்தவனை பாற்சாலையில் வேலைபார்க்கிறதற்கு விடப்படாது.

7. பால்கறக்குமுன் பசுக்களின் மடிகளும் முலைகளும் கழுவப்பட்டதோவென்று ஒவ்வொரு பார்காரனும் பார்க்க வேண்டும். பால்கறக்குமுன் பால் கறப்போன் தனதுகைகளை சவுக்காரத்தால் சுத்திசெய்யவேண்டும். சாணம் அல்லது மூத்திரத்தால் பால் பழுதுபடாதபடி எத்தனங்கள் செய்யவேண்டும்.

8. தண்ணீர், அல்லது வேறெந்த நீர்ப்பதார்த்தத்தையேனும் வேறுவஸ்துவையேனும் சேர்த்து பாற்காரனாவது பட்டிச்சொந்தக்காரனாவது பாலைப்பழுதாக்கப்படாது. மேலும் அவன் அப்படியான கலப்பான பாலை விற்கவேணும். விலைக்கு வாங்கும்படி கேட்கவேணும். விற்பனவுக்கென்று வைத்திருக்கவேணும் படாது.

9. பாற்சாலையின் பாவிப்புக்காக வைத்திருக்கும் அல்லது பாற்சாலைக்கு சொந்தமாயிருக்கும் தட்டுமுட்டுகளும் தளபாடங்களும் மற்றும் தேவையான சாமான்களும் துப்பரவாயிருக்க வேண்டும்.

10. பால் அனுப்பப்படும் எல்லாப் பாத்திரங்களும் அதி நுட்பமாகத் துப்பரவாயும் துப்பரவான பொருட்களினால் ஏற்றபடி மூடி அடைத்து அல்லது குச்சிட்டடைத்திருக்கவும் வேண்டும். அப்பாத்திரங்களைக் கக்கத்தில் கொண்டு போகவும் படாது. போத்தில்களின் வாயில் விரல்கள் படவிடவும் படாது.

11. மாடு ஆடு வைத்திருக்கும் மால் அல்லது இடங்கள் மாட்டுக் காலைகளுக்குரிய சுகாதார சங்கத்தின் மூன்றாம் உபவிதியின் பிரகாரம் வைக்கப்பட்டு அதில் விதித்த கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

12. ஒவ்வொரு பாற்சாலை லைசன்சு காரனும் பால் சேகரிக்கிறதற்காகவும் பால் ஆயத்தப்படுகிறதற்காகவும் சுகாதார சங்கத்தலைவர் உத்தரவுகொடுத்த இடத்திலும் மாட்டுமாலிலிருந்து அவருடைய உத்தரவுப்படியான தூரத்திலும் ஒரு பால்அறை கட்டுவிக்கவேண்டும். இவ்வறையில் அவனுடைய தொழிலில் பாவிக்கப்படும் பாத்திரங்கள் எல்லாம் துப்பரவுபண்ணின பிற்பாடு வைக்கப்படவேண்டும். நிலம் சீமேந்தால் மூடியிருக்க வேண்டும். நிலமும் சிவரும் பொருந்தும் மூலை வளைந்திருக்க வேண்டும். சுவர்கள் சாந்தால் மூடப்பட்டதாயும் அல்லது அழுத்தமான பலகையால் அல்லது இரும்பால் செய்யப்பட்டனவாயும் இருக்கவேண்டும். சுகாதாரசங்கத்தலைவர் அல்லது சுகாதார டாக்குத்தர் குறித்தபடி காலத்துக்குக்காலம் இச்சுவர்கள் சுண்ணும்பினால் வெள்ளை அடிக்கப்பட்டு அல்லது மைபூசப்பட்டிருக்கவேண்டும். பால்அறையின் இரண்டு எதிர்ச்சுவராவது காற்றுப்படக்கூடிய சார்பிலிருக்கவேண்டும். தூசிவராமல் கூரைகள் எல்லாம் பொளிச்சாலிடப்பட மச்சுப்பலகையால் அடைத்திருக்கவேண்டும். ஒரு சன்னலும் ஒரு கதவும் ஆகுதல் இருக்கவேண்டும். சன்னல கண்ணாடி அல்லது மூடியில்லாததாயும், 3 × 2 அடி நீள அகலமுள்ளதாயும் இலையான் போகாதபடி வலைப்பின்னலால் மூடப்பட்டதாயும் இருக்கவேண்டும். கதவு சன்னலுக்கு எதிராயும் இறுக்கமாய் மூடக்கூடியதாய், இலையான் போகாத வலைப்பின்னலால் மூடப்பட்டதாயும் இருக்கவேண்டும். பாற்சாலையில் மாபிற்கல்லால் அல்லது கற்பலகையால் அல்லது துத்தநாகத்தால் அல்லது சுவறக்கூடாத வஸ்துவினால் மூடப்பட்ட மேசை வைத்திருக்கவேண்டும். பால் சேகரிக்கிறதற்காகவும் ஆயத்தப்படுத்துகிறதற்காகவும் ஒழிய வேறு ஒரு முகாந்தரத்துக்காகவும் இந்த அறையைப் பாவிக்கப்படாது.

13. சுகாதாரசங்கத் தலைவராவும் அல்லது சுகாதார டாக்குத்தர் அல்லது சுகாதார சங்கத்துச் சக்கிறுத்தார் அல்லது இன்ஸ்பெக்றர் ஆகியவர்கள் எல்லாராலும் எல்லா வேளையிலும் பரிசோதிக்கக் கூடியபடி பாற்சாலையின் லைசன்சுக்காரன் தன்னுடைய வாடிக்கைக்காரர்களின் டாப்பு ஒன்று வைத்திருக்கவேண்டும்.

14. லைசன்சுபத்திரத்தில் பாற்சாலையில் வைத்திருக்கக்கூடிய மாடுகளின் தொகை காட்டியிருக்கவேண்டும்.

15. பாற்சாலை லைசன்சுக்காரன் சங்கத்தலைவரின் உத்தரவில்லாமல் பாற்சாலையின் நிலையத்தை மாற்றப்படாது, லைசன்சு பண்ணப்பட்ட இடத்தைவிட வேறு ஒரு இடத்திலாவது பால் கறக்கவும்படாது.

16. ஒவ்வொரு லைசன்சுக்காரனும் பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர் ஒவ்வொருமுறையும் தங்களுடைய றிப்போட்டுகளை எழுதுவதற்காக பாற்சாலையில் ஒரு றிப்போட் புஸ்தகம் வைத்திருக்கவேண்டும்.

17. சுகாதாரசங்க எல்லைக்குள் லைசன்சுபெற்ற பாற்சாலையிலிருந்து அல்லது பால்விற்பவனிடமிருந்து அல்லது விற்பனவுக்காக வெளியாய் வைத்திருப்பவனிடமிருந்து பால் சோதிக்கிற எல்லாவேளையிலும் ஒரு சாம்பில் போத்தல் பால் எடுக்க சங்கத்தலைவருக்கு, சுகாதார டாக்குத்தருக்கு, சக்கிறுத்தாருக்கு அல்லது இன்ஸ்பெக்றருக்கு அதிகாரமுண்டு.

18. சுகாதாரசங்க எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு பாற்சாலையும் சங்கத்தலைவரால் பதிவுபண்ணப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பக்காரனுக்கும் அவனுடைய பெயரும் இலக்கமும் பதிந்த ஒரு சீட்டு சங்கத்தலைவரால் கொடுக்கப்படும் சங்கத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தரேனும் சுகாதார இன்ஸ்பெக்றரேனும் இச்சீட்டுக்களைக் காட்டும்படி கேட்கும்போது உடனே காட்டவேண்டும்.

19. ஒவ்வொரு பாற்சாலையிலுமுள்ள பால் அறையில் இந்தப் பிரமாணங்களின் கொப்பி தூக்கியிருக்க வேண்டும்.

20. இந்த உபவிதிகளில் எதுவும் மீறப்படுமிடத்து அல்லது கைக்கொள்ளாது விடப்படுமிடத்து பாற்சாலை வைத்திருக்க லைசென்ஸ் பெற்றவன் அதற்கு உத்தரவாதியாயிருத்தல் வேண்டும்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினால் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் கொள்ளுப்பிட்டி டுப்பிலிக்கேசன் ரோட்டுத் திறந்தலாகிய ஒரு பகிரங்க தேள்வைக்கு வேண்டியதான பின்னர் சொல்லப்படும் காணிகளை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால் :

பிரதமபடத்து இலக்கம் 20,069. பம்பலப்பிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வஜ்ஜிரு ரோட்டு 24 ம் நம்பர் பேரால் வரி கொடுக்கும் காணியின் பகுதி | தோட்டம், ஓடு போட்ட கற்கட்டிடமும், ஓடு போட்ட தகர மரக்கட்டிடமும் உள்ள மூன்று கற்கட்டிடங்களும், ஒரு தகரகல் விறாந்தையும், ஓடுபோட்ட கற்கட்டிட மலகூடமும் அலதத்சசோந்த தகர தொடுப்பும், கற்படிகளும், கற்கான்களும், கற்கானின் பகுதியும், கற்சுவரின் பகுதியும், தண்ணீர் பைப்புள்ள கற்தொட்டியும் ஒரு யான்ஹோலும், 40 வருஷ 6 தென்னமரங்களும் 25 வருஷ 3 தென்னமரங்களும், 5 வருஷ 3 தென்னமரங்களும், 20 வருஷ ஒரு பலாமரமும், 5 வருஷ மூன்று தென்ன மரங்களுமுளது | டொக்டர் ஐ. இ. மெய்யர் | 0 0 24 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 2 | வஜ்ஜிரு ரோட்டு 24 ம் நம்பர் பேரால் வரி கொடுக்கும் காணியின் பகுதி | தோட்டம், தகரம் கற்கட்டிட தொடுப்புள்ள இரண்டு ஓடு போட்ட கற்கட்டிடங்களின் பகுதிகளும், கட்சுவரின் பகுதியும், கற்காணின் பகுதியும, 40 வருஷ ஒரு தென்னமரமும், 25 வருஷ ஒரு தென்னமரமும், 5 வருஷ ஒரு தென்னமரமும், 20 வருஷ ஒரு பலாமரமும், உளது | டொக்டர் ஐ. இ.மெய்யர் | 0 0 6·5 |
| 3 | ஷை .. | தோட்டம், ஓடு போட்ட கற்கட்டிடத் தொடுப்பும் தகரமரக்கட்டிட தொடுப்புமுள்ள பகுதியுள்ள, ஓடு போட்ட கற்கட்டிடத்தின் பகுதியும், கற்படிகளும், 25 வருஷ மூன்று தென்னமரங்களும், இரண்டு வருஷ ஒரு தென்னமரமும், 20 வருஷ ஒரு பலாமரமுமுளது | ஷை .. | 0 0 13·16 |
| | | | | 0 1 3·21 |

மேற்சொல்லப்பட்ட காணிகளை ஆட்சிஞப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1931 ம் ஆண்டு பெப்ருவரிமீ 2 ந் திகதி திங்கட்கிழமை, காலை 10 மணிக்கு கொழும்பு நகரசங்க கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும், அவ்வுடந்தைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்று உறுதிகளாலும் பதிவு கொப்பிகளாலும், சபாநாயகருக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்கக் கந்தோர்
கொழும்பு, 1930 ம் ஹூ டிசம்பர்மீ 22 திகதி.

எச். ஈ. நியுன்ஹம்,
நகரசங்க சபாநாயகரும், கொழும்பு நகராதிகாரியும்.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

இத்தால் சகலரு மறியவும 9,000 அந்தர் உப்பு கரையூரிலிருந்து மன்னாருக்கு ஏற்றிக்கொண்டுபோய்க் கொடுக்க விரும்புபவர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாம. ஏற்றுக்கொள்ளப்படும கேள்விக்காரன் 1931 ம ஹூ தை மாதத்தில் இரண்டாம கிழமைவரையில் 2.000 அந்தரையும மிகுதியை அதன்பின் அறிவிக்கும திகதியிலும ஏற்றிக்கொண்டுபோய் ஒப்புவிக்க வேண்டியவராவர்.

2. எல்லாக் கேள்விப்பத்திரங்களும இணைப்பிரதிகளாக ஒட்டி முத்திரை வைத்து மேல்விலாசமிட்டிருக்கவேணும.
(a) மூலப்பிரதியில் வடமாகாணம கவண்மேந்து ஏசன்றுவுக்கு மேல்விலாசம எழுதுக.
(b) இணைப்பிரதியில் கொழும்பு அரசிறை வருமான காரியஸ்தருக்கு என்று மேல்விலாசம எழுதுக.

3. "உப்பு ஏற்றக்கேட்கும கேள்விப்பத்திர" மென்று உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுதவேண்டும. 1931 ம ஹூ தைமாதம 10 ம திகதி வெள்ளிக்கிழமை மத்தியானத்துக்குமுன் கவண்மேந்து ஏசன்றர் கந்தோரிலும அரசிறை வருமான காரியஸ்தர் கந்தோரிலும சேரவேண்டியது.

4. கேள்விப்பத்திரம அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடதாசியில் எழுதவேணும. அக்கடதாசிகள் யாழ்ப்பாணக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம. அப்படியான கடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்களை ஏற்கப்படமாட்டாது. மாற்றங்களுக்குக் கையொப்ப முதலெழுத்துகளிடப்படவேண்டும. அல்லாவிடில் கேள்விப்பத்திரங்கள் பிழையென விலக்கப்படும.

5. கேள்விப்பத்திரக் கடதாசிகள் பெற விரும்புவோர் கச்சேரியில் ரூபா 50 கட்டி பற்றுச்சீட்டைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவண்மேந்து ஏசண்டினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டுப் பத்து நாளைகளுக்குள்ளாக போதி பிணை கொடுக்கத்தவறினால் அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுசதால் கட்டப்பட்ட காசு பறிமுதலாக்கப்படும். அப்படித் தவறியவர்களின் பெயர் கவண்மேந்து கொந்திருத்து கொடுக்கப்படாதென்று தள்ளப்பட்டவர்களுடைய பெயர் பதியப்பட்ட இடாப்பிலும் சேர்க்கப்படும். ஒப்பந்தம் நிறைவேற்றியவுடன் கட்டிய காசு முதலியவை திருப்பிக் கொடுக்கப்படும்.

6. ஒவ்வொடு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான மனுஷர் பிணை நிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அணைத்திருக்க வேண்டும. அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரத்தில் ஒரு அந்தருக்கு ஏற்றுமதிகூலி எவ்வளவென்று குறிக்கவேண்டும். நூற்றுக்கு இரண்டு வீதத்துக்கு மேற்படாமல் சேதத்துக்குக் கழிவிடப்படும்.

8. ஒவ்வொரு ஒப்பந்தக்காறனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காகப் போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும்.. புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த சட்டங்களும் மற்றுங் காரியங்களும் யாழ்ப்பாணக் கச்சேரியில் அறிந்துகொள்ளலாம்.

9. அரசாட்சியாரிடம் ஒப்பந்தம் எடுத்து அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியவர்களுடைய டாப்பில் தனித்தேனும் மற்றவர்களுடன் ஒருமித்தேனும் காணப்படும் பேர்வழிகாரருடைய ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அன்றியும், ஒப்பந்தககாரன் அந்த இடாப்பிலுள்ளவர்களில் யாரையாவது அல்லது வடமாகாண அரசாட்சி ஏசன்றர் தமக்குப் போதியதெனக் கண்ட நியாயங்களை எழுத்தில் கொடுத்துத் தடை நொத்தீசு கொடுப்பின் அப்படித தடைசெய்யப்பட்டவரைத் தம் ஊழியத்தில் உபயோகிக்கப்படாது.

10. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமுங் கவனிக்கப்பட மாட்டாது.

11. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயஞ்சொல்லாது மறுக்க முழு உருத்தும் கவண்மேந்துக்கு உண்டு.

பீ. மோற்றிமர்,
கவண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1930 ம் ஹூ மார்கழிமீ 23 ந் திகதி.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.